# மத்திய அரசின் முதன்மை திட்டங்களில் அதிக கவனம்

## கிராமப்புற வங்கிகளுக்கு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவுரை

Rural Banks of the Southe
04th August, 2023
Chennai

சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற தென்மண்டல கிராமப்புற வங்கிகளின் தலைவர்களுடனான ஆய்வுக் கூட்டத்தில் பேசிய மத்திய நிதியமைச்சர். உடன் நிதி சேவைகள் துறைச் செயலர் விவேக் ஜோஷி.

**சென்னை, ஆக.4:** மத்திய அரசின் முதன்மைத் திட்டங்களில் கிராமப்புற வங்கிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவுறுத்தினார்.

தென் மண்டலத்தைச் சேர்ந்த கிராமப்புற வங்கிகளின் தலைவர்கள், மூத்த அதிகாரிகளுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை எம்.ஆர்.சி. நகரில் உள்ள தனியார் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியதாவது:

வங்கிகளில் செயல்படுத்தப்படும் தொழில்நுட்பம், கடன் மேலாண்மை அமைப்பு மற்றும் 'கோர் பேங்கிங் சிஸ்டம்' ஆகியவற்றை சிறந்த முறையில் பயன்படுத்தி, செயல்பாடுகளை குறித்த காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டும். எண்ம முறை (டிஜிட்டல்) செயல்பாடுகளில் கவனம் வேண்டும். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், அடல் பென்ஷன் யோஜனா, முத்ரா யோஜனா, பிரதமர் ஸ்வா நிதித் திட்டங்களின் கீழ் வியாபாரிகளுக்கு கடன் வழங்குதலை தீவிரப்படுத்த வேண்டும். கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளம் போன்ற மத்திய அரசின் முதன்மைத் திட்டங்களில் கிராமப்புற வங்கிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றார் அவர்.

இந்த கூட்டத்தில், தமிழ்நாடு, ஆந்திரம், தெலங்கானா, கேரளம், புதுச்சேரி மற்றும் கர்நாடக நிதித் துறைகளின் சிறப்புச் செயலர்கள் மற்றும் முதுநிலை அதிகாரிகள் பாரத ஸ்டேட் வங்கி அதிகாரிகள், கிராமப்புற வங்கிகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ராகுல் தண்டனைக்கு தடை

# நீதி வென்றது: மு.க.ஸ்டாலின் கருத்து

**சென்னை, ஆக. 4:** ராகுல் காந்தி மேல்முறையீட்டு வழக்கில் உச்சநீதிமன்றத்தின் அளித்த உத்தரவால், நீதி வென்றுள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அவர் ட்விட்டரில் வெளியிட்ட பதிவு: அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு தடைவிதித்த உச்சநீதிமன்றத்தின் முடிவை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இந்த உத்தரவு நீதித் துறையின் வலிமை மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கையையும், மக்களாட்சியின் மாண்புகளையும் காப்பாற்றவேண்டியதன் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. ராகுல் காந்தி விவகாரத்தில் நீதி வென்றுள்ளது. வயநாடு ராகுல் காந்தியை தக்கவைத்துக் கொண்டது என்று அவர் தெரிவித்தார்.

**கே.எஸ்.அழகிரி (தமிழக காங்கிரஸ் தலைவர்):** உச்சநீதிமன்ற தீர்ப்பு மத்தியில் நடைபெறும் சர்வாதிகார ஆட்சிக்கு மிகப்பெரிய அடியாக அமைந்துள்ளது. மக்களவையில் ராகுலின் குரல் மீண்டும் ஒலிக்கப் போவது, இந்தியாவின் நீதி பரிபாலனத்துக்கும், சட்டத்தின் ஆட்சிக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றி.

**கே.பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்):** ராகுல் காந்தியின் மேல்முறையீடு வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம்,பதவியை பறித்ததால் மக்களின் ஜனநாயக உரிமை பாதித்துள்ளது என சரியாகக் சுட்டிக்காட்டியுள்ளது.

**இரா.முத்தரசன் (இந்திய கம்யூ):** சூரத் கீழமை நீதிமன்றம் ஏற்படுத்திய களங்கத்தை உச்சநீதிமன்றம் தூய்மைப்படுத்தியுள்ளது. ராகுல் காந்தி மீண்டும் மக்களவையில் செயல்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும்.

# அதிமுக மாநாடு: மாவட்டச் செயலர்களுக்கு எடப்பாடி பழனிசாமி உத்தரவு

**சென்னை, ஆக.4:** மதுரையில் நடைபெறவுள்ள அதிமுக மாநாட்டை எழுச்சியோடு நடத்த வேண்டும் என்று மாவட்டச் செயலர்களுக்கு அக் கட்சியின் பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டார்.

அதிமுக மாவட்டச் செயலர்கள் கூட்டம், கட்சியின் பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன், பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், மூத்த நிர்வாகிகள் கே.பி.முனுசாமி, எஸ்.பி. வேலுமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மதுரையில் ஆக. 20-இல் நடைபெறவுள்ள அதிமுக பொன்விழா மாநாடு குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசுகையில், மதுரையில் நடைபெறும் மாநாடு, அதிமுகவின் வரலாற்றில் இல்லாத வகையில் எழுச்சியான மாநாடாக அமைய வேண்டும். 10 லட்சம் பேர் திரளும் வகையில் இந்த மாநாட்டை நடத்த வேண்டும். மக்களவைத் தேர்தலின் வெற்றிக்கு வித்திடும் வகையில் மாநாடு அமைய வேண்டும் என்றார்.

**அண்ணாமலைக்கு எச்சரிக்கை:** கூட்டத்துக்கு பின்னர் முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார் செய்தியாளர்களிடம் கூறியது: அதிமுக பொன்விழா மாநாடு குறித்து கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. அதிமுகவை தமிழக பாஜக தொடர்ந்து விமர்சிப்பது குறித்து கேட்கிறீர்கள். அதிமுகவின் அடிமட்ட தொண்டனை விமர்சனம் செய்தால்கூட, கடும் ஆட்சேபம் தெரிவித்து வருகிறோம். அது பாஜக தலைவர் அண்ணாமலைக்கு தெரியும். இது போன்ற விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவரது கடமை என்றார் அவர்.

# முன்னாள் அமைச்சர் மீதான வழக்கு ரத்து

**சென்னை,ஆக.4:** காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கக் கோரி ரயில் மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டதாக திமுக முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி, முன்னாள் எம்எல்ஏ உள்ளிட்ட மூவருக்கு எதிரான வழக்குகளை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி 2018-ஆம் ஆண்டு மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தியும், தமிழகத்தின் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க தமிழக அரசை வலியுறுத்தியும், கோயம்புத்தூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் 2018-ஆம் ஆண்டு திமுக சார்பில், மத்திய - மாநில அரசுகளைக் கண்டித்து ரயில் மறியல் உள்ளிட்டப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தப் போராட்டங்களில் கலந்துகொண்டு போராடிய திமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி, திமுக முன்னாள் எம்எல்ஏ கார்த்திக் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர் மீது மட்டும் குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அந்த வழக்குகளை ரத்து செய்யக்கோரி பாதிக்கப்பட்ட மூவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

இந்த வழக்குகளை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், திமுக நடத்திய இந்தப் போராட்டங்களில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்த நிலையில், குறிப்பிட்ட சிலர் மீது மட்டுமே வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்த மூவர் மீதான வழக்குகளை ரத்து செய்வதாக உத்தரவிட்டார்.

# அதிமுகவில் மீண்டும் இணைந்தார் முன்னாள் அமைச்சர் அன்வர்ராஜா

**சென்னை, ஆக. 4:** அதிமுகவிலிருந்து நீக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் அன்வர்ராஜா மீண்டும் அக்கட்சியில் வெள்ளிக்கிழமை இணைந்தார்.

அதிமுகவில் சசிகலாவை மீண்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும், பாஜகவுடன் கூட்டணி கூடாது என்று அன்வர்ராஜா கூறியதைத் தொடர்ந்து, அவர் 2021-இல் அதிமுகவிலிருந்து நீக்கப்பட்டார். இந்த நிலையில், அவர் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் கட்சியின் பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமியை வெள்ளிக்கிழமை சந்தித்து மீண்டும் கட்சியில் இணைந்தார். பின்னர், அன்வர்ராஜா செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுக மாபெரும் இயக்கம். கட்சியில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி உயர்ந்திருந்த எனக்கு சிறு சறுக்கல். மீண்டும் என்னை எடப்பாடி பழனிசாமி கட்சியில் சேர்த்துள்ளார். கட்சியின் சட்டத்திட்டத்துக்குக் கட்டுப்பட்டு, கட்சியின் வளர்ச்சிக்குப் பாடுபடுவேன்.

பாஜகவை விமர்சித்ததால் அதிமுகவிலிருந்து நீக்கப்பட்டது குறித்து கேட்கிறீர்கள். விமர்சனம் என்பது வேறு; கூட்டணி என்பது வேறு. ராமநாதபுரம் தொகுதியில் நான் போட்டியிடுவது குறித்து கட்சிதான் முடிவு செய்ய வேண்டும். பாஜக அங்கு போட்டியிட்டால், அந்தக் கட்சிக்காக வாக்கு சேகரிப்பேன் என்றார் அவர்.

# மகளிர் உரிமைத் தொகை: இன்றுமுதல் 2-ஆம் கட்ட முகாம்

**சென்னை, ஆக. 4:** கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின் 2-ஆம் கட்ட முகாம்கள் சனிக்கிழமை (ஆக.5) தொடங்குகின்றன. இந்த முகாம்களை ஆக.16-ஆம் தேதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்துக்கான முதல்கட்ட முகாம்கள் வெள்ளிக்கிழமை நிறைவடைந்தன. இந்த முகாம்கள் மூலமாக 80 லட்சத்துக்கும் மேற்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இணையதளத்தில் பதிவேற்றப்பட்டன.

இந்த நிலையில், இரண்டாம் கட்ட முகாம் சனிக்கிழமை தொடங்கவுள்ளது. சுமார் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, நகரப் பகுதி மக்களை மையப்படுத்தி இந்த முகாம்கள் நடைபெறவுள்ளன.

ஏற்கெனவே, இரண்டாம் கட்ட முகாம்களுக்கான விண்ணப்பங்களும், டோக்கன்களும் வழங்கப்பட்டுள்ளன. விடுபட்டவர்களுக்கு வழங்கும் பணியையும் நியாயவிலைக் கடைப் பணியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆக.16-ஆம் தேதிக்குள் ஒரு கோடிக்கும் அதிகமான விண்ணப்பதாரர்களின் விவரங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அரசுப் பள்ளி ஒதுக்கீடு மாணவர்களிடம் மருத்துவக் கல்லூரிகள் கட்டணம் வசூலிக்கக் கூடாது

## மருத்துவக் கல்வி இயக்ககம் கண்டிப்பான உத்தரவு

**சென்னை, ஆக. 4:** எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகளில் 7.5 சதவீத ஒதுக்கீட்டின் கீழ் சேர்ந்த அரசுப் பள்ளி மாணவர்களிடம் எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கக் கூடாது என கல்லூரிகளுக்கு மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் உத்தரவிட்டுள்ளது.அத்தகைய செயல்பாடுகள் தீவிரமாக கண்காணிக்கப்படும் என்றும், அதன் பேரில் அறிக்கை கேட்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவக் கனவை நனவாக்கும் நோக்கில் அவர்களுக்கு அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 7.5 சதவீத இடங்கள் உள் ஒதுக்கீடாக வழங்கப்படுகிறது. அந்த வகையில் நிகழாண்டில் மட்டும் 600-க்கும் மேற்பட்டோர் அந்த ஒதுக்கீட்டின் கீழ் இடங்கள் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், திருச்சி கி.ஆ.பெ.விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த சில அரசுப் பள்ளி மாணவர்களிடம் பல்கலைக்கழக கட்டணம், கொடிநாள் நிதி என ரூ.7,500 வசூலிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

இது பல்வேறு விமர்சனங்களுக்கு வித்திட்ட நிலையில், இது தொடர்பாக மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் ககன்தீப் சிங் பேடி, சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகத்திடம் விளக்க அறிக்கை கோரியுள்ளார்.

வசூலிக்கப்பட்ட தொகையை மாணவர்களிடம் திருப்பி அளிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். இந்த சூழலில், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் சாந்திமலர் அனைத்து மருத்துவக்கல்லூரிகளுக்கும் முக்கிய சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

மருத்துவக் கல்லூரிகளில் 7.5 சதவீத ஒதுக்கீட்டின் கீழ் சேரும் மாணவர்களிடம், கல்விக் கட்டணம், புத்தகக் கட்டணம், உணவு, விடுதிக் கட்டணம் என எந்த வகையிலும் பணம் வசூலிக்கக் கூடாது.

இந்த ஒதுக்கீட்டின் கீழ் படிக்கும் மாணவியர், 'புதுமை பெண் திட்டம்' நிதியுதவி உள்பட அனைத்து விதமான கல்வி உதவித் தொகை பெறுவதற்கும் தகுதி உடையவர்கள்.

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவக் கல்வியை கற்பதற்கு சில இடர்பாடுகள் இருப்பதால், கல்லூரி நிர்வாகங்கள் கூடுதல் கவனம் செலுத்தி அவர்களின் கற்கும் திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்காக, முதுநிலை பேராசிரியர் தலைமையில் வழிகாட்டுதல் குழு அமைக்கப்பட வேண்டும். மாணவர்களின் கல்வி மேம்பாடு மற்றும் அக்குழுவின் செயல்பாடுகளைக் கண்காணித்து கல்லூரி முதல்வர்கள், மருத்துவக் கல்வி இயக்குநரகத்துக்கு தகவல் அளிக்க வேண்டும்.

அதேபோன்று, சிறப்பு நேர வகுப்புகள் நடத்தியும் மாணவர்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும்.

மருத்துவக் கல்லூரிகளில் 7.5 சதவீத இட ஒதுக்கீட்டில் சேரும் மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படுவது மிக தீவிரமான விஷயமாக கருதப்படும். அவ்வாறு கட்டணம் வசூலிக்கப்பட்டிருந்தால், அதன்பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகத்துக்கு தவறாமல் அனுப்பி வைக்க வேண்டும் என்று அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சி.வி.சண்முகம் மருத்துவமனையில் அனுமதி

**சென்னை, ஆக. 4:** மாநிலங்களவை உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான சி.வி.சண்முகம் உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு இதய பாதிப்புக்காக சிகிச்சை பெற்ற சி.வி.சண்முகம், அதன் பின்னர் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை இரவு அவருக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டது. இதையடுத்து சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

# கோகுல்ராஜ் கொலை வழக்கில் பிறழ் சாட்சியம்

## சுவாதி நேரில் ஆஜராக விலக்கு

**சென்னை, ஆக. 4:** கோகுல்ராஜ் கொலை வழக்கில் பிறழ் சாட்சியம் அளித்ததாக தொடுக்கப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சுவாதி நேரில் ஆஜராவதிலிருந்து விலக்களித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சேலம் மாவட்டம், ஓமலூரைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரி கோகுல்ராஜ். இவரை ஆணவக் கொலை செய்ததாக தீரன் சின்னமலை கவுண்டர் பேரவை நிறுவனர் யுவராஜ், அவரது கார் ஓட்டுநர் அருண் ஆகியோருக்கு 3 ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. மேலும், 7 பேருக்கு ஆயுள் உள்ளிட்ட தண்டனை வழங்கப்பட்டது.

விசாரணை நீதிமன்றம் வழங்கிய இந்த தண்டனையை எதிர்த்து உயர்நீதிமன்ற கிளையில் சம்பந்தப்பட்டவர்கள் மேல்முறையீடு மனு தாக்கல் செய்தனர். இந்த வழக்கில் 5 பேர் விடுதலை செய்யப்பட்டதை ரத்து செய்து, அவர்களுக்கு தண்டனை வழங்கக் கோரி கோகுல்ராஜ் தாய் சித்ரா மற்றும் சிபிசிஐடி சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. யுவராஜ் உள்பட 8 பேரின் ஆயுள் தண்டனையை உறுதி செய்த சென்னை உயர்நீதிமன்றம், இருவரின் ஆயுள் தண்டனையை ஐந்து ஆண்டுகளாக குறைத்து ஜூன் 2-ஆம் தேதி தீர்ப்பளித்தது.

**சுவாதி ஆஜர்:** இந்த மேல்முறையீட்டு வழக்கு விசாரணையின்போது, முக்கிய சாட்சியான சுவாதி பிறழ் சாட்சியம் அளித்ததால், நீதிபதிகள் தாமாக முன்வந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்காக விசாரணைக்கு எடுத்தனர். இந்த வழக்கு, நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், ஆனந்த் வெங்கடேஷ் முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது சுவாதி கைக்குழந்தையுடன் நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜரானார்.

அவர் தரப்பில் பதில் மனுவும் தாக்கல் செய்யப்பட்டது. விசாரணையை நேரில் நடத்த வேண்டும் என சுவாதி தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதையடுத்து வழக்கை நவ. 3-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்த நீதிபதிகள், அடுத்த விசாரணைகளின் போது நேரில் ஆஜராவதில் இருந்து சுவாதிக்கு விலக்களித்து உத்தரவிட்டனர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
E-டெண்டர் மூலம் ஒப்பந்தப்புள்ளி அழைப்பதற்கான அறிவிப்பு
தேசிய அளவிலான போட்டி ஒப்பந்தப்புள்ளி

தே. ஒ. அ. எண். 23/ கோ. தூத்துக்குடி பா.சா.அ / வஅ 2 / 2023/ நாள் : 03.08.2023

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நடைமுறையின் படி தகுதியுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து (முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்)) தமிழ்நாடு டெண்டர்களில் வெளிப்படைத்தன்மை சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000க்கு இணங்க – (இரண்டு உறை) – இனம் வாரியாக கீழ் பின்வரும் பணிகளுக்கு E-டெண்டர் அழைக்கப்படுகின்றன.

| தே. ஒ. அ. எண். | திட்டத்தின் பெயர் | பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி உட்பட) | முன்வைப்பு தொகை | ஒப்பந்தப் புள்ளி முன் ஆய்வுக் கூட்டம் | ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பித்தல் | ஒப்பந்தப் புள்ளி திறப்பு |
|---|---|---|---|---|---|---|
| 23 | தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி மாநகராட்சிக்கு பகுதி அடிப்படையிலான வளர்ச்சி பணிகளுக்கு உட்படுத்தப்படாத 4 மண்டல பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் (திட்டப் பணிகள் முடிக்க வேண்டிய காலம் 24 மாதங்கள், சோதனை ஓட்டம் 6 மாதங்கள் மற்றும் பராமரிப்பு பணிகள் 5 வருடங்கள்) | ரூபாய் 130.00 கோடி | ரூபாய் 75.00 இலட்சங்கள் | 23.08.2023 அன்று முற்பகல் 11.00 மணி | 09.09.2023 அன்று பிற்பகல் 03.00 மணிக்குள் | 11.09.2023 அன்று பிற்பகல் 03.30 மணிக்கு |

நிதி : அம்ருத் 2.0 மற்றும் உலக வங்கி

ஒப்பந்தபுள்ளி முன் வைப்புத்தொகை மின்னணு பரிவர்த்தனை முறையில் செலுத்த வேண்டும். மின்னணு பரிவர்த்தனை அறிக்கையின் நகலை தொழில் நுட்ப ஒப்பந்த புள்ளியில் சேர்த்து ஒப்பந்தக்காரர் சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பந்தபுள்ளி ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் ஆகியவை இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக. மற்ற அனைத்து விவரங்களுக்கும் இணையதளத்தில் 09.08.2023 முதல் பார்வையிடலாம்.

செ.ம.தொ.இ/ 4325 /ஒப்பந்தப்புள்ளி/2023
தேவை இத்தருணம் - குடிநீர் சிக்கனம்
"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"
தலைமைப் பொறியாளர் (பொ),
த.கு.வ.வாரியம், மதுரை.

CHANGE OF NAME

I, Palaniselvi, W/o. Raja Pandiyan, Vadugan Kuththagai, Alathur, Pattukkottai Taluk, Thanjavur District, Tamil Nadu, shall henceforth be known as **SAVITHRI**.

PALANISELVI.
Pattukkottai, 15.07.2023.

Change of Name

I, D.MURUGAPANDEAN, Rank: Hav, Trade : Washerman, Army No.14628987A, S/o. Durairaj, residing at Kolakkudi Village, Kolakkudi Post, Musiri Taluk, Tiruchirappalli District - 621 208, Tamilnadu, shall henceforth be known as **D.MURUGAPANDIAN.**

D.MURUGAPANDEAN.
Trichy, 04.08.2023.

படிவம் G
விருப்பம் தெரிவிக்கக் கோரும் (EOI) அழைப்பு
ஸ்ரீ PKP ஸ்பின்டெக்ஸ் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்
தமிழ்நாடு, தர்மபுரியில் இயங்கிவரும் ஸ்பின்னிங் மில்
இந்திய நொடிந்த நிலை மற்றும் திவால் நிலை வாரியம் (கார்ப்பொரேட் நபர்களுக்குரிய இன்சால்வன்சி தீர்மான நடைமுறைகள்) ஒழுங்கு விதிகள்-2016-ஒழுங்கு விதி 36A(1)-ன் கீழ்

முக்கிய விவரங்கள்

| | | |
|---|---|---|
| 1. | கடன் பெற்ற கார்ப்பொரேட் நிறுவனப் பெயர் மற்றும் PAN/ CIN/ LLP எண்: | ஸ்ரீ PKP ஸ்பின்டெக்ஸ் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், CIN: U17111TZ2006PTC012807 |
| 2. | பதிவு அலுவலக முகவரி: | 5A தெற்கு ரயில்வே சாலை, குமாரசாமிப் பேட்டை, தர்மபுரி 636703,தமிழ்நாடு |
| 3. | URL இணையதளம்: | கிடைக்கவில்லை |
| 4. | பெரும்பான்மை நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்: | நல்லனஹள்ளி கிராமம், தர்மபுரி - கிருஷ்ணகிரி நெடுஞ்சாலை சாலை, தர்மபுரி 636702, தமிழ்நாடு. |
| 5. | பிரதான தயாரிப்புகள் / சேவைகள் நிறுவப்பட்ட திறன்: | கார்ப்பரேட் கடன்தாரர் வழங்கிய தகவலின்படி, நிறுவப்பட்ட திறன் 24000 ஸ்பிண்டில்கள் |
| 6. | கடந்த நிதியாண்டில் விற்பனை செய்யப்பட்ட பிரதான தயாரிப்புகள் / சேவைகள் முக்கிய அளவு மற்றும் மதிப்பு: | கார்ப்பரேட் கடன்தாரர் வழங்கிய தகவலின்படி கடந்த நிதியாண்டில் உற்பத்தி நடவடிக்கைகள் நடைபெறவில்லை |
| 7. | பணியாளர்கள்/ வேலையாட்கள் எண்ணிக்கை: | NIL |
| 8. | கடந்த இரண்டு ஆண்டுகளின் அதாவது கடைசியாக உள்ள நிதி அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), கடன் வழங்கியவர்கள் பட்டியல், பிந்தைய நடைமுறைகள் குறித்த முக்கிய நிகழ்வுகள் தேதிகள் போன்ற மேல்விவரங்கள் கிடைக்கும் இடம்: | cirp.pkp@gmail.com என்ற முகவரியில் மின்னஞ்சல் மூலம் விவரங்களைப் பெறலாம் |
| 9. | சட்டம் பிரிவு 25(2)(h)-ன் கீழ் தீர்மான மனுதாரர்களுக்கான தகுதிகள் கிடைக்கும் முறை: | cirp.pkp@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி மின்னஞ்சல் மூலம் விவரங்களைப் பெறலாம். |
| 10. | விருப்பம் தெரிவித்தல் (EOI) வந்துசேர இறுதித் தேதி: | 19.08.2023 |
| 11. | உத்தேச தீர்மான மனுதாரர்களின் தாற்காலிகப் பட்டியல் வழங்கும் தேதி: | 21.08.2023 |
| 12. | தாற்காலிகப் பட்டியலுக்கு ஆட்சேபணை சமர்ப்பிக்க இறுதித் தேதி | 26.08.2023 |
| 13. | பரிசீலிப்புக்கு EOI சமர்ப்பிக்க மின்னஞ்சல் விவரம்: | cirp.pkp@gmail.com |

ஒம்/-
சந்தானம் ராஜுஸ்ரீ
IBBI/IPA-002/IP-N00330/2017-18/10935
AFA:AA2/10935/02/011223/202410,
பதிவுசெய்யப்பட்ட முகவரி: ஃபிளாட் எண்.6, பழைய எண் 20, புதிய எண் 8, ராமகிருஷ்ணா தெரு, தி. நகர், சென்னை 600017
தொடர்பு முகவரி: B1102,மெட்ரோ ஜோன் 44, பிள்ளையார்கோயில் தெரு, அண்ணா நகர், சென்னை 600040.
CIRP-யில் ஸ்ரீ PKP ஸ்பின்டெக்ஸ் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்-காக
தேதி: 04.08.2023
இடம்: சென்னை

kotak
Kotak Mahindra Bank

கோட்டக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
**பதிவு அலுவலகம்:** எண்.27-BKC, C-27, G-பிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (கிழக்கு), மும்பை - 400 051, மகாராஷ்டிரா, இந்தியா.
**திருச்சி கிளை:** எண்.B36, ரத்னா என்கிளேவ், சாஸ்திரி சாலை, தில்லை நகர், திருச்சி - 620 018.

அசையும் / அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

**பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 8(6) க்கான விதி விலக்கு - இன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் பரவலாக பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், **கோட்டக் பேங்க் லிமிடெட் (ஜாமீன் பெற்று கடனளித்தவர்)** - க்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகாரப்பூர்வ அலுவலரால் **08.01.2022** அன்று இயற்சுவாதீனம் எடுக்கப்பட்ட இதன் கீழ் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், **30.07.2023 ஆம்** தேதியின்படி நிலுவைத்தொகை **ரூ.3,24,53,675.38 பைசா (ரூபாய் மூன்று கோடியே இருபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து மற்றும் பைசா முப்பத்தெட்டு மட்டும்)** மற்றும் **31.07.2023** முதல் மேல்வட்டி, செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றை **M/s. வசந்த பவன் மற்றும் பிறரிடமிருந்து** வசூலிப்பதற்காக, **"இருக்கின்ற இடத்தில்"** மற்றும் **"இருக்கின்ற நிலையில்" "இருக்கின்ற இடத்தில் உள்ள அனைத்தும்"** மற்றும் **"திரும்ப பெறத்தகாதவாறு"** என்ற அடிப்படையில் **24 ஆகஸ்ட் 2023** ஆம் தேதியன்று மின்னணு ஏல முறையில் விற்பனை செய்யப்படவுள்ளன.

**சொத்துக்களின் விவரங்கள், அடிப்படை விலை (இதற்கு குறைவாக சொத்துக்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது) மற்றும் டேவணித்தொகை உள்ளிட்ட விவரங்கள் குறிப்பாக இதன் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விவரங்கள்

**திருமதி பார்வதி குமரகுரு என்பவருக்கு சொந்தமான சொத்து -** திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி பதிவு மாவட்டம், இணை I சார் பதிவு மாவட்டம், திருச்சிராப்பள்ளி தாலுக்கா, திருச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட, நகராட்சி வார்டு 1, பிளாக் எண்.16, பழைய TS எண். 53, புதிய வார்டு K, புதிய பிளாக் எண். 8, TS எண்.18இல் அமையப்பெற்ற 0.65 செண்ட் பரப்பளவு கொண்ட இடம் மற்றும் இதர இடம் ஆகியன சேர்ந்து மொத்தம் ஏக்கர் 2.41 செண்ட் பரப்பில் உள்ள இடத்தை வீட்டு மனைகளாகப் பிரித்து லே-அவுட்களாக உருவாக்கப்பட்ட "ஃப்ரண்ட்ஸ் என்க்ளேவ்" என பெயரிடப்பட்ட இடத்தில் உள்ள 5798 சதுர அடி பரப்பளவு கொண்ட பிளாட் எண்.7 மற்றும் அதனுடன் கூடிய அனைத்து வழிதட உரிமைகள் மற்றும் பாதை பாத்தியங்கள் ஆகியவற்றுடன் கூடிய சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். **இதன் நான்கெல்லைகளாவன :** பிளாட் எண். 6 க்கு **- கிழக்கு,** பிளாட் எண். 8 க்கு **- மேற்கு,** சாலைக்கு **- வடக்கு,** தன்சிக்கு சொந்தமான இடத்துக்கு **- தெற்கு.**
**அளவீடுகளாவன -** கிழமேல் வடக்கு - 81 அடி, தெற்கு - 47 + 47 அடி, தென்வடல் கிழக்கு - 53 அடி, மேற்கு - 68 அடி.
இச்சொத்தின் புதிய வார்டு AB, புதிய பிளாக் எண்.8, புதிய T.S. எண்.18/7 உடன் கூடிய அனைத்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் மற்றும் அந்தந்த அடமான தேதியிலிருந்து / அதற்கு பிறகு கட்டப்பட்டுள்ள / கட்டப்படவுள்ள இதர கட்டமைப்புக்கள் மற்றும் தற்காலத்தில் மற்றும் வருங்காலத்தில் நிலத்துடன் இணைக்கப்பட்ட / நிரந்தரமாக பிணைக்கப்பட்ட அனைத்து ஆலை மற்றும் இயந்திரங்கள் மற்றும் அனைத்து அறைகலன்கள் அதில் பொருத்தப்பட்டவைகள் ஆகியன.

**1) அடிப்படை விலை (ரூபாயில்) ரூ.2,60,00,000/- & 2) டேவணித்தொகை (ரூபாயில்) ரூ.26,00,000/-**

**மின்னணு ஏலம் மூலம் அசையும் / அசையா சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளாவன -**

**1.** சொத்துக்கள் ஆய்வு - விருப்பமுள்ள நபர்கள் சொத்துக்களை **07.08.2023 முதல் 23.08.2023 வரை காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை** ஆய்வு செய்து கொள்ளலாம்.
டேவணித்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி & நேரம் **- 23.08.2023 மாலை 05.00 மணி வரை.**

**2.** ஏல விற்பனை "ஆன்லைன் மின்னணு ஏலம் / விலைகோரல்" மூலம் KMBL இன் அங்கீகரிக்கப்பட்ட சேவைதாரரான, அஹமதாபாத், குஜராத் - 380 006 இல் அலுவலகம் கொண்ட M/s ஆக்ஷன் டைகர் மூலம் நடைபெறும். உதவி எண்கள் திரு. பிரவீன் குமார் அவர்களை7961200515 / 9722778828 மற்றும் உதவிக்கான மின்னஞ்சல் முகவரி sales@AuctionTiger.net வலைதளம் - www.AuctionTiger.net.

**3.** ஏல விற்பனை **24 ஆகஸ்ட் 2023 ஆம் தேதியன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை** முடிவுறு நேரத்திற்கு கடைசி ஐந்து நிமிடத்தில் விலைகோரல் வைக்கப்படும் பட்சத்தில், தன்னியல்பான 5 (ஐந்து) நிமிடம் கால நீட்டிப்புடன் நடைபெறும்.

**4.** சமர்ப்பிக்கப்படும் விலைப்புள்ளி அதிகாரப்பூர்வ அலுவலரால் ("AO") நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலைக்கு அதிகமானதாக இருக்க வேண்டும். மேலும் இதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கான தங்களது விலைப்புள்ளியை **இந்திய ரூபாய். 2,00,000/- (ரூபாய். இரண்டு இலட்சம் மட்டும்)** என்ற மடங்கில் அதிகரிக்க வேண்டும்.

**5.** சொத்துக்கள் அதிகாரப்பூர்வ அலுவலரால் ("AO") நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை விலைக்கு குறைவாக விற்கப்படமாட்டாது. அடிப்படை விலைக்கு குறைவாக கோரப்பட்ட விலைப்புள்ளி நிராகரிக்கப்படுவதோடு, டேவணித்தொகையும் அபராதமாக கருதி கழித்துக்கொள்ளப்படும்.

**6.** வெற்றி பெற்ற ஏலதாரர் விலைத்தொகையின் 25% தொகையை (ஏற்கனவே செலுத்திய டேவணித்தொகை உட்பட) மின்னணு ஏல செயல்முறைகள் முடிவுற்றவுடன் 24 மணி நேரங்களுக்குள் செலுத்த வேண்டும்., வாங்கிய தொகையின் மீதி 75% தொகையை வங்கியால் விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 (பதினைந்தாவது) ஆவது நாள் அல்லது அதிகாரப்பூர்வ அலுவலரால் ("AO") தனது சொந்த அதிகாரத்தில் எழுத்து பூர்வமாக அதிகரிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் செலுத்த வேண்டும்., தவறும் பட்சத்தில், வாங்குபவரால் ஏற்கனவே செலுத்தப்பட்ட அனைத்து தொகைகளையும் வங்கி அபராதமாக கருதி கழித்துக்கொள்ளும். ஏலதாரர் உரிய காலக்கெடுவுக்குள் ஏலத்தொகையை 24 மணி நேரத்துக்குள் செலுத்த தவறும் பட்சத்தில், அவரது விலைப்புள்ளி ரத்து செய்யப்பட்டு அடுத்தபடியாக அதிகபட்ச விலைப்புள்ளி கோரியுள்ள ஏலதாரருக்கு சொத்தை வாங்க வாய்ப்பளிக்கப்படும்.

**7** ஏலதாரர்கள் விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வங்கியின் வலைதளத்திலுள்ள தொடர்பை விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கும் ஏல செயல்முறைகளில் பங்கேற்பதற்கும் முன்பே பார்வையிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**8.** விலைப்புள்ளிகள் ஆன்லைனில் மட்டும் உரிய படிவ(ங்களில்) முறையாக நிரப்பப்பட்ட பொருத்தமான விவரங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதர படிவங்களில் நிரப்பப்பட்ட / முழுமையற்ற விலைப்புள்ளிகள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

**9.** அனைத்து விலைப்புள்ளிகளும் பின்வரும் KYC ஆவண நகல்களுடன் இருக்க வேண்டும். i). PAN அட்டை, ii). ஆதார் அட்டை / கடவுச்சீட்டு, iii). நடப்பு முகவரி சான்று, iv). மதிப்புறு மின்னஞ்சல் முகவரி, v). தொடர்பு எண்/கள் (அலைபேசி / தொலைபேசி) போன்றவை. மேற்சொன்ன ஆவணங்களின் ஒளிவருடப்பட்ட நகல்களை மேற்சொன்ன மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன் மேற்கண்ட ஒவ்வொரு சொத்துக்கும் / ஒவ்வொரு இனத்துக்கும் எதிராக குறிப்பிட்டுள்ள டேவணித்தொகையை **"Kotak Mahindra Bank Ltd"** என்ற பெயருக்கு **திருச்சியில் செலுத்தத்தக்கவாறு** எடுக்கப்பட்ட கேட்பு வரைவோலையாக (DD) செலுத்த வேண்டும்.

**10).** விருப்பமுள்ள ஏலதாரர்கள் டேவணித்தொகை சமர்ப்பித்ததற்க்கான சான்றை வங்கியால் ஏற்றுக்கொள்ளத்தக்க வடிவில் வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**11).** ஜாமீன் பெற்று கடனளித்தவரிடமிருந்து அல்லது / சேவைதாரரிடமிருந்து தேவையான தகவல்களை மின்னஞ்சல் மூலம் மட்டுமே அனுப்ப வேண்டியுள்ளதால், ஏலதாரர்கள் மதிப்புறு மின்னஞ்சல் முகவரியை கொண்டிருக்க வேண்டும்.

**12).** விருப்பமுள்ள உத்தேச ஏலதாரர்கள், மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்கான ஆன்லைன் / நேரடி பயிற்சிக்கு இதன் மேற்குறிப்பிட்ட விவரங்களில் சேவைதாரரை தொடர்பு கொள்ளலாம்.

**13).** எனினும், அதிகாரப்பூர்வ அலுவலரோ ("AO") அல்லது ஜாமீன் பெற்று கடனளித்தவரோ அல்லது சேவைதாரரோ ஏதேனும் தொழில்நுட்ப கோளாறு / மின் துண்டிப்பு போன்றவற்றுக்கு பொறுப்பல்ல.

**14).** வெற்றி பெறாத ஏலதாரர்களின் டேவணித்தொகை மின்னணு ஏல செயல்முறைகள் முடிவுற்ற தேதியிலிருந்து 7 வேலை நாட்களுக்குள் திருப்பி தரப்படும்.

**15).** விற்பனையானது, வங்கியின் உறுதிப்படுதலுக்கு கட்டுப்பட்டதாகும். கடன்தாரர் / ஜாமீன்தாரர்(கள்) ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு நிலுவையாக உள்ள தொகை முழுவதையும் மின்னணு ஏலத்துக்காக குறிக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்துக்கு முன்பாக செலுத்தி விட்டால், விற்பனை நடத்தப்படமாட்டாது.

**16).** அதிகாரப்பூர்வ அலுவலரின் ("AO") சிறந்த அறிவுக்கும் தகவலுக்கும் எட்டிய வரையில் மேற்சொன்ன சொத்துக்களின் மீது வேறு எந்த வில்லங்கமும் இல்லை., எனினும், உத்தேச ஏலதாரர்கள் சொத்துரிமை / வில்லங்கங்கள் போன்றவை தொடர்பாக தங்களது சுய சிரத்தையுடன் சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். அதிகாரப்பூர்வ அலுவலர், ("AO") மேற்சொன்ன அடமான சொத்து தொடர்பாக ஏதேனும் கடன் பொறுப்பு, வில்லங்கம் சொத்து வரி அல்லது அரசுக்கான மற்றும் இதர வரி நிலுவைகள் ஏதேனும் இருப்பின் அதற்கு பொறுப்பல்ல. சொத்துக்கள் ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்தோ அல்லது தெரியாமலோ இருக்கின்ற மற்றும் வருங்கால வில்லங்கங்களுடனேயே விற்பனை செய்யப்படுகின்றன.

**17).** அதிகாரப்பூர்வ அலுவலர், ("AO") எக்காரணமும் கூறாமல் ஏதேனும் விலைப்புள்ளி / விலைப்புள்ளிகளை (ஏதேனும் சொத்துக்கான) நிராகரிக்க அல்லது மின்னணு ஏலத்தை ரத்து செய்ய உண்டான அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ளவராவார்.

**18).** விற்பனைக்கான நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதலின் பேரில், அதிகாரப்பூர்வ அலுவலர் ("AO") வாங்குபவர் பெயரில் "விற்பனைக்கான சான்றை" வழங்குவார். முத்திரை தீர்வை, பதிவு கட்டணங்கள், பரிமாற்ற கட்டணங்கள், VAT, TDS, GST போன்றவற்றை வாங்குபவரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**TDS பிடித்தத்துக்கான நிபந்தனைகளாவன : TDS பிடிக்கப்பட வேண்டும் - ஏல விலையில் 1%**
* TDS பிடித்தம் செய்து அடமானதாரர்/கள் பெயரில் செலுத்தப்பட வேண்டும்.
* அடமான சொத்து கூட்டு உடைமை சொத்தாக இருந்து, கிரைய ஆவணத்தில் உரிமையாளர்களின் உடைமை விகிதம் குறிப்பிடப்படாமலிருந்தால், TDS ஆனது முதல் உரிமையாளர் பெயரில் கொடுக்கப்பட வேண்டும்., அல்லது அவ்வாறு விகிதாச்சார உரிமை குறிப்பிடப்பட்டிருந்தால், TDS ஆனது உரிமையாளர்களின் விகிதாச்சார அடிப்படையில் பிடித்தம் செய்யப்பட வேண்டும்.
* ஏலத்தில் வாங்குபவர் TDS செலுத்திய பிறகு, படிவம் 16A யை TDS பிடித்தத்தை நிரூபிக்கவும், உறுதிப்படுத்தவும் சமர்ப்பிக்க வேண்டும்.

**19).** விற்பனையானது சர்ஃபாசி சட்டம் / விதிகள் 2002 ல் பரிந்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டது.

**20).** சொத்துக்கள் ஆய்வு உள்ளிட்ட ஏலத்திற்கான இதர மேலும் விவரங்களுக்கு விருப்பமுள்ள ஏலதாரர்கள் வங்கியின் வலைதளம் website@WWW.Kotak.com அல்லது **திரு. ஸ்ரீதரா S அவர்களை தொலைபேசி எண். 99161 65915 இல் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை** தொடர்பு கொள்ளலாம்.

**தேதி : 05.08.2023**
**இடம் : திருச்சி**
ஒப்பம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்)
**கோட்டக் மஹிந்திரா பேங்க்**